This Booklet contains 24 printed pages.
इस पुस्तिका में 24 मुद्रित पृष्ठ हैं।

# AK14I

**Test Booklet No.**
परीक्षा पुस्तिका संख्या

## PAPER—I / प्रश्न-पत्र—I

## TAMIL LANGUAGE SUPPLEMENT / तमिल भाषा परिशिष्ट

## PART—IV & V / भाग—IV & V

**Test Booklet Code**
परीक्षा पुस्तिका संकेत

**K**

Do not open this Test Booklet until you are asked to do so.
इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए।
Read carefully the Instructions on the Back Cover (Pages 23 & 24) of this Test Booklet.
इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 23 व 24) पर दिए गए निर्देशों को ध्यान से पढ़ें।
**For Instructions in Tamil see Page 2 of this Booklet.**
**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें।**

### *Instructions for Candidates :*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part—IV (Language—I) **OR** Part—V (Language—II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Parts—I, II, III from the Main Test Booklet and Parts—IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part—IV and Part—V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Blue/Black Ballpoint Pen only** for writing particulars on this page/marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **K**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **Two** Parts—IV and V, consisting of **60** Objective-type Questions and each carrying 1 mark :

   Part-IV : Language-I (Tamil) (Q. Nos. 91-120)
   Part-V : Language-II (Tamil) (Q. Nos. 121-150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil Language have been given. **In case the language(s) you have opted for as Language-I and/or Language-II is a language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that Language. The languages being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part-V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

### *परीक्षार्थियों के लिए निर्देश :*

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो या तो भाग—IV (भाषा—I) **या** भाग—V (भाषा—II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं।**
2. परीक्षार्थी भाग—I, II, III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग—IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग—IV व भाग—V के अन्तर्गत दिए गए हैं। भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर-पत्र पर निशान लगाने के लिए **केवल नीले/काले बॉलपॉइंट पेन** का प्रयोग करें।
5. इस भाषा पुस्तिका का **संकेत K** है। यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर-पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है। अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ।
6. इस परीक्षा पुस्तिका में दो भाग—IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं तथा प्रत्येक 1 अंक का है :

   भाग–IV : भाषा–I (तमिल) (प्रश्न सं० 91–120)
   भाग–V : भाषा–II (तमिल) (प्रश्न सं० 121–150)
7. भाग–IV में भाषा–I के लिए 30 प्रश्न और भाग–V में भाषा–II के लिए 30 प्रश्न दिए गए हैं। इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से सम्बन्धित प्रश्न दिए गए हैं। **यदि भाषा–I और/या भाषा–II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है/हैं, तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लें। जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए।**
8. **परीक्षार्थी भाग–V (भाषा–II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा–I (भाग–IV) में चुनी गई भाषा से भिन्न हो।**
9. रफ़ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें।
10. सभी उत्तर केवल OMR उत्तर-पत्र पर ही अंकित करें। अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें। उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है।

Name of the Candidate (in Capitals) : ______________________
परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में)

Roll Number (in figures) : ______________________
अनुक्रमांक (अंकों में)

(in words) : ______________________
(शब्दों में)

Centre of Examination (in Capitals) : ______________________
परीक्षा-केन्द्र (बड़े अक्षरों में)

Candidate's Signature : ______________ Invigilator's Signature : ______________
परीक्षार्थी के हस्ताक्षर निरीक्षक के हस्ताक्षर

Facsimile signature stamp of Centre Superintendent ______________________

**17-I**

இந்த நூற்கட்டு 24 பக்கங்கள் கொண்டது.

# AK14I

தேற்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**K**

## தாள்—I

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

## பகுதி—IV & V

அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.

இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 23 & 24) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.

*தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள் :*

1. இந்நூர்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்காண இணைப்பாகும். இது பகுதி IV (மொழி I) அல்லது பகுதி V க்கு (மொழி II) தமிழ் மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. இரண்டிற்கும் உரியது அல்ல.
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I, II, III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV & V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V க்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை நீலம்/கறுப்பு மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **K** ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் பக்கம் 2-லும் அச்சாகி உள்ள ஸங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேற்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இது தேர்வு நூற்கட்டு 2 பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய 60 பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே IV & V என்றவாறாக அமையும்.

   பகுதி—IV : மொழி—I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)

   பகுதி—V : மொழி—II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி IV இல் மொழி I க்கும், பகுதி V இல் மொழி II க்கும் தலா 30 வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.
8. தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிறமை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) : ____________________

தேர்வு வரிசை எண் (எண்ணில்) : ____________________

(எழுத்தில்) : ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) : ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் : ____________________ தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : ____________________

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

தமிழை மொழிப்பாடம்—I ஆகத் தேர்வு செய்த மாணாக்கர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பகுதி IV : தாள் I
## தமிழ்

*குறிப்பு*: கொடுக்கப்பட்டுள்ள கவிதையைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **91** முதல் **96** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்
உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.
- சுப்பிரமணிய பாரதியார்

**91.** அமரர்க்கான சிறப்பினைக் கண்டோர் யார்?

(1) தெளிந்த தமிழின் சுவையினைக் கண்டவர்

(2) தமிழ் இலக்கணங்களைக் கற்றவர்

(3) தமிழ் இலக்கியங்களைக் கற்றவர்

(4) தமிழுக்கு பணிசெய்பவர்

**92.** வாக்கினில் ஒளியுண்டாக என்ன நிகழ வேண்டும்?

(1) உள்ளத்தில் தெளிந்த உணர்வு வேண்டும்

(2) உண்மையின் ஒளி உள்ளத்தில் உண்டாக வேண்டும்

(3) உள்ளத்தில் அன்பு ஒளி உண்டாக வேண்டும்

(4) உள்ளத்தில் தமிழ் உணர்வு பெருக வேண்டும்

93. தமிழ் மொழியில் இயற்றப்பட வேண்டியவை:

(1) மறையாத புகழ் கொண்ட புதுநூல்கள்

(2) பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்

(3) புதிய மொழிபெயர்ப்புகள்

(4) பழந்தமிழ் நூல்களின் உரைகள்

94. இதில் மகிமை இல்லை:

(1) மறைவாகப் பிறநாட்டுக் கதைகளைச் சொல்வதில்

(2) புதியதான நூல்களைப் படிப்பதில்

(3) மறைவாக நமக்குள் பழங்கதைகள் சொல்வதில்

(4) மறைவாக நமக்குள் புதுக்கதைகள் சொல்வதில்

95. வெளிநாட்டார் வணங்க வேண்டியது

(1) திறமான கல்வியை

(2) திறமான கலைகளை

(3) திறமான புலமையை

(4) திறமான நூல்களை

96. வெள்ளம்போல் பெருகவேண்டும் என கவிஞர் சொல்வன:

(1) கலை, கவிதை

(2) சொல், செயல்

(3) நூல், எழுத்து

(4) அறிவு, அறம்

குறிப்பு: பின்வரும் கேள்விகளுக்கு (97–111) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க:

97. பாடப்பயிற்சி ஒன்றில் அமைந்துள்ள சிறிய பத்தியில் சில சொற்கள் விடுபட்டுள்ளன. அதனை மாணவி படித்துப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்ப வேண்டும். இந்தப் பயிற்சியின் வழி ..... மதிப்பிடப்படுகிறது.

(1) புதிய சொற்களைப் பயன்படுத்தும் திறன்

(2) தொகுத்துச் சொல்லும் திறன்

(3) சொற்களை எழுத்துப் பிழையின்றி படித்தல்

(4) புரிதல் திறன்

98. இதில் எது படித்துப் புரிதல் திறனை அளவிடும் கேள்வி?

(1) நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞரின் பெயரைக் குறிப்பிடுக

(2) பாரதி எழுதிய வேறு நூல்களைப் படித்திருக்கிறீர்களா?

(3) கையாளுதல் என்ற சொல்லை உமது வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக

(4) 'செம்பழம்' என்ற சொல்லைச் சரியாக உச்சரிக்கவும்

99. ஒரு குழந்தை பொருள்பொருந்த எழுதும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு முன் வண்ணக்குச்சிகளை வைத்துக் கிறுக்குதல், வட்டங்கள் போன்ற அடிப்படை வடிவங்களை வரைதல் மூலம் தனது ........... திறன்களை நன்கு வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(1) உணர்ச்சி

(2) நிலைத்திருத்தல்

(3) அறிதல்

(4) அனிச்சைச் செயல்

100. நட்பார்ந்த கடிதத்தை எழுதும் பொழுது மாணவர் இவ்வகைக் கூறுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்:

(1) பிறருக்கு தெளிவாக இருத்தல், சுருக்கக்குறியீடுகளை பயன்படுத்துதல், தெளிவான வடிவமைப்பு

(2) தற்சார்புள்ள நிலை, எந்த வடிவமைப்பும் இன்மை

(3) சிலவகை வடிவமைப்பு, தற்சார்புள்ள சொல்லாட்சி, சுருக்கக்குறியீடுகளின் பயன்பாடு

(4) தற்சார்பற்றிருத்தல், சரியான வடிவத்தை பயன்படுத்தல்

101. மொழிக்கான சிறப்பு உச்சரிப்பு விதிகளின் காரணமாக மொழியைக் கற்கும் மாணவர்கள் பேசும் பொழுது பல சமயங்களில் தன்னம்பிக்கை குறைந்தவர்களாகின்றனர் இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கான ஒரு வழி

(1) வகுப்பறையில் பேச்சு வழியான விளையாட்டுக்களை பயன்படுத்துவது

(2) பேச்சுக்கான சிறப்புப் பயிற்சிகளை நடத்துவது

(3) பிழை ஏற்படும் பொழுதெல்லாம் அதனைச் சரிசெய்வது

(4) வகுப்பில் குழந்தைகள் உரக்க வாசிப்பது

102. இந்தப் பாடலை வைத்துப் பாடம் நடத்தலாம் என்று நான் முடிவுசெய்தேன். கற்போர் பாடலைப் படித்து அதில் உள்ள எந்தச் சொல் இடம் நிரப்பியாகப் பயன்படுகிறது என்பதை யூகித்துச் சொல்லமுடிகிறதா என்று பார்க்க வேண்டும். பிறகு அவர்கள் சரியாகச் சொன்னார்களா என்பதைச் சரிபார்க்க வேண்டும். இது ஒரு தகவல் .................. செயல்பாடு.

(1) சரிசெய்தல்

(2) இடைவெளி

(3) செலுத்துதல்

(4) பரிமாறுதல்

103. மற்ற வயதைவிட இந்த காலகட்டத்தில் ஒரு குழந்தை மொழியை இலகுவாகக் கற்கிறது

(1) 8 வயதுக்குப் முன்

(2) 8 வயதுக்குப் பின்

(3) 10 வயதுக்கு முன்பு

(4) 13 வயதுக்குப் பின்

104. மாணவர்களுக்கு அதிக தகவல்களை ஆழமான உள்ளடக்கத்துடன் அளித்தாலும் அதற்கான செலவு அதிகமாகாது. இது எந்த வகை ஊடகம்?

(1) எலக்ட்ரானிக்

(2) லைவ் டிஸ்ப்ளே/டிமான்ஸ்ட்ரேஷன்ஸ்

(3) ஓவர்ஹெட் ப்ரஜெக்டர் டிரான்ஸ்பரன்ஸி/ஸ்லைட்ஸ்

(4) காகிதம்

**105.** பல மொழிபேசுபவர்கள் உள்ள வகுப்பில் மாணவர்கள் ஒரு மொழியைக் கற்கிறார்கள்

(1) ஒரே வகையான மொழியைப் பேசும் மாணவர்களை அவ்வப்போது குழுவாக அமைப்பதன் மூலம் அதிகம் பலன் கிடைக்கும்

(2) கற்கும் மொழியில் திறனை வளர்க்கும் நோக்கத்துடன் மற்ற மொழியில் பேசுவதை அது தடைசெய்கிறது

(3) தகவல் பரிமாற்றம் குறைவதால் வகுப்பறை மந்தமாக மாறுகிறது

(4) உச்சரிப்பில் உள்ள வேறுபாடுகள், இலக்கண அமைப்புகள் போன்றவற்றை ஒப்பிட்டு அறிய வாய்ப்பு உள்ளது, அதனால் கற்பதற்கான மொழியை புரிந்து கொள்வதும் பயன்படுத்துவதும் அதிகமாகிறது

**106.** இரண்டாம் மொழி அல்லது வெளிநாட்டு மொழியைக் கற்கும் மாணவரின் கற்கும் திறன் அளவு மொழிப் பரிமாற்றத்தின் மூலம் பாதிக்கப்படுகிறது. இது நேராமல் தடுக்க ஆசிரியர்

(1) தன்னம்பிக்கை வளர்க்கவும் கலந்துரையாடலை ஊக்குவிக்கவும் குழுச் செயல்பாடுகளை அதிகமாக நடத்த வேண்டும்

(2) மற்ற மொழியைக் கற்பதில் மாணவர்களுக்கு உள்ள சிரமத்தை அறிய அவ்வப்போது சோதனைகளை நடத்த வேண்டும்

(3) கடினமான பாடங்களைக் கொண்டு அதிகச் செறிவான படித்தல் வகுப்புகளை நடத்த வேண்டும்

(4) இரண்டாம் மொழியை கற்பதற்கேற்ற அறிதல் திறனுக்கான திடமான அடித்தளத்தை உருவாக்க முதல் மொழியில் மொழித்திறனை வளர்ப்பதற்கான கற்றல் செயல்பாடுகளை அளிக்க வேண்டும்

**107.** பல வகையான திறமைகளைக் கொண்ட ஒரு கலப்பான வகுப்பில் ஆசிரியர் மாணவர்களைக் குறித்து அவசியம் உறுதி செய்துகொள்ள வேண்டியது

(1) வீட்டுப் பாடங்களை செய்து முடிக்க தங்கள் பெற்றோர்களுடன் வந்து ஆசிரியர்களைச் சந்தித்தல்

(2) கலந்துரையாடல்களை நடத்தவும் சமூகத்திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் பெரிய அளவிலான குழு நடவடிக்கைகளில் பங்கெடுக்கவும் ஏற்ற வகையில் சிறு செயல்திட்டங்களை வகுப்பறையில் நடத்துதல்

(3) மற்றவர்களைப் போல மதிப்பெண் பெற பள்ளி முடிந்தபின் சிறப்பு வகுப்புகளில் கலந்து கொள்வது

(4) தங்கள் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள மனநல மருத்துவரையும் ஆசிரியரையும் அணுகுதல்

108. பாடநூலில் உள்ள கேள்விகள் சில சமயங்களில் அடிப்படையானதாகவோ அல்லது வெறும் தகவல் சார்ந்ததாகவோ இருக்கலாம். அந்த நிலையில் ஆசிரியர்

(1) பாடநூலைக் குறைவாகப் பயன்படுத்த வேண்டும்

(2) அதிகமான இலக்கியங்களைப் படிப்பதற்கு பரிந்துரைக்க வேண்டும்

(3) படைப்புத் திறன் கொண்ட சிந்தனையையும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பயிற்சிகளையும் அளிக்க வேண்டும்

(4) அதற்கேற்ப பாடங்களை அமைத்துக் கொள்ள வேண்டும்

109. வெளிநாட்டு மொழி கற்கும் மாணவர்கள் அம்மொழியில் எழுதப்பட்டுள்ள பாடம் ஒன்றை அதன் உச்சரிப்பு காரணமாக வாய்மொழியாக பொருளுரைக்க சிரமப்படுகிறார்கள். இதனை தீர்க்க வழி

(1) எழுத்து, உச்சரிப்பு இரண்டையும் இணைத்து வாசித்துப் பழகுதல்

(2) படிக்கும் பொழுது சரியான உச்சரிப்பைக் கவனித்து அதனைத் திரும்பத்திரும்ப உரக்கச் சொல்லிப் பயிற்சி செய்தல்

(3) ஆசிரியரின் உச்சரிப்பு முறையை போலி செய்து பேசுதல்

(4) கடினமான சொல்லை தாங்களாகவே படித்துப் பயிற்சி செய்தல்

110. மொழி வகுப்பில் உள்ள மாற்றுத் திறன் கொண்ட மாணவர்களிடம் உரிமை உணர்வு, வெற்றிக்கான ஊக்கம், தன்மதிப்பு ஆகியவற்றை வளர்க்க

(1) அவர்களின் தேவைகளை கையாள தகுதி பெற்ற ஆசிரியர்களை மட்டும் நியமிக்கலாம்

(2) பள்ளியின் மற்ற மாணவர்களுடன் கலக்காமல் அவர்களை மட்டும் தனிக்குழுவாக வைக்கலாம்

(3) வேறுபட்ட பாடநூல்களை அளிக்கலாம்

(4) கூட்டாக இணைந்து கற்க, ஒன்றிணைந்து செயல்பட, கலந்துரையாடல் செய்ய வாய்ப்புகளை உருவாக்கலாம்

111. மரபான மொழி வகுப்பு ஆசிரியரை மையமாகக் கொண்டது. நவீன மொழி வகுப்பு மாணவரை மையமாகக் கொண்டது. மரபான வகுப்பின் ஒரு தன்மை

(1) தனித்தன்மையுடன் வடிவமைக்கப்பட்ட மொழிக் கல்விச் செயல்பாட்டில் மாணவர்கள் பங்கேற்க/நடத்த ஆசிரியர் வசதியமைத்துத் தருகிறார், அதனை நிர்வகிக்கிறார்

(2) பேச்சு மற்றும் எழுத்து முறையின் முன்மாதிரியாக எப்போதும் ஆசிரியர்கள் இருக்கிறார்கள், மாணவர்கள் அதனை அப்படியே திரும்பச் செய்கிறார்கள்.

(3) கற்றலின் பொறுப்பாளராக ஆசிரியர் இருக்கிறார். மாணவர்களின் செயல்பாடுகள் பற்றிய தொடர் மதிப்பீட்டைப் பெறுவதற்கு உறுதியளிக்கிறார்

(4) வகுப்புக்கு வெளியே மாணவர்கள் சுதந்திரமாகக் கற்கிறார்கள். அவ்வப்போது எழுத்துத் தேர்வில் பங்கு பெறுகிறார்கள்

குறிப்பு : கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **112** முதல் **120** வரை) மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

1949 ஏப்ரல் 27இல் இலண்டனில் கூடிய காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் ஜவஹர்லால் நேரு இந்தியா சார்பில் கலந்து கொண்டார். பிறகு தாயகம் திரும்பிய நேரு இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கையை உலகம் அறியும் வண்ணம் எடுத்துரைத்தார். இந்திய அயல்நாட்டுக் கொள்கையானது நாட்டின் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் எந்தவித இரகசிய உடன்பாட்டையும் செய்துகொள்ளாது என்பதை அறிவித்தார். இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் மூலம் அடக்கப்பட்ட தேசிய மக்கள், ஒருக்கப்பட்ட இன மக்களுக்குத் தேவையான அடிப்படை மனித உரிமைகளைத் தரவும் அவற்றைப் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தினார். காமன்வெல்த் அமைப்பில் பல நாடுகள் உள்ளன. அவற்றால் இந்திய நாட்டின் சுதந்திர நிலைக்கு பாதிப்பு ஏற்பட அனுமதிக்க மாட்டோம், தேவைப்பட்டால் எந்த நாடும் காமன்வெல்த் அமைப்பை விட்டு வெளியேறலாம், காமன்வெல்த் என்பது ஒரு அமைப்பு, ஆனால் எந்த ஒரு நாட்டையும் அதிகாரம் செய்ய அதற்கு உரிமையில்லை என்பது நேருவின் உறுதியான கருத்தாகும். விடுதலை பெற்ற இந்தியா காமன்வெல்த் அமைப்பில் சேர்வதால் தனது சுதந்திரம், தன்னாட்சி முறை, ஜனநாயக ஆட்சி எதையும் இழந்துவிடாது என்பதை நேரு தெளிவாகக் கூறினார்.

தென்னாப்பிரிக்காவில் நிற இன பேதத்தின் அடிப்படையில் நடைபெற்ற கொடுமைகளை நேரு இந்தியப் பாராளுமன்றத்தில் விவாதத்திற்குக் கொண்டுவந்தார். 1962-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21-ஆம் நாள் ஷார்ப்வில் நகரில் நடைபெற்ற படுகொலைச் சம்பவத்தை இனப்படுகொலை என்று கூறிய நேரு தென்னாப்பிரிக்கா காமன்வெல்த் அமைப்பில் சேருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து இனவேறுபாட்டைப் பின்பற்றும் எந்த நாடும் ஐக்கிய நாடுகள் கொண்டுள்ள கொள்கைக்கு எதிராகச் செயல்படுவதாக உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை நேரு கையாண்ட முறை பல நாடுகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

**112.** காமன்வெல்த் மாநாட்டில் நேரு எந்த வகையில் கலந்து கொண்டார்?

(1) விடுதலைப் போராட்டவீரர் என்ற வகையில்

(2) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் என்ற வகையில்

(3) நாட்டின் பிரதமர் என்ற வகையில்

(4) இந்திய நாட்டின் பெருமகன் என்ற வகையில்

**113.** உலகம் அறியும் வண்ணம் நேரு எடுத்துரைத்தது....

(1) இந்தியாவின் பொருளாதாரம்

(2) இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கை

(3) இந்தியாவின் நல்லெண்ணம்

(4) இந்தியாவின் உள்நாட்டுக் கொள்கை

**114.** இரகசிய உடன்பாட்டைச் செய்துகொள்வதால் பாதிக்கப்படுவது எது?

(1) நாட்டின் சுதந்திரம்

(2) நாட்டின் தன்னுரிமை

(3) வெளிநாட்டுக் கொள்கை

(4) நாட்டின் முன்னேற்றம்

**115.** அடிப்படை மனித உரிமைகளைத் தரவும் அவற்றைப் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கைகள் எதன் மூலம் எடுக்கப்பட வேண்டும்?

(1) இந்தியாவின் சமாதானக் கொள்கையின் மூலம்

(2) இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் மூலம்

(3) இந்தியாவின் உள்நாட்டுக் கொள்கையின் மூலம்

(4) இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையின் மூலம்

**116.** .................. எந்த நாடும் காமன்வெல்த் அமைப்பை விட்டு வெளியேறலாம்

(1) பொருளாதாரம் பாதிக்கப்படும்போது

(2) ஆட்சியாளர்கள் மாறும்போது

(3) தன் மீது போர் தொடுக்கப்பட்டால்

(4) தன் சுதந்திர நிலைக்கு பாதிப்பு ஏற்பட்டால்

117. எந்த ஒரு நாட்டையும் அதிகாரம் செய்ய ........... உரிமையில்லை

(1) உலகவங்கிக்கு

(2) காமன்வெல்த் அமைப்புக்கு

(3) அண்டை நாட்டுக்கு

(4) ஐக்கிய நாடுகள் சபைக்கு

118. ஷார்ப்வில் நகரில் நடைபெற்றது ஒரு......

(1) அரசியல் வன்முறை

(2) மனித உரிமை மீறல்

(3) இனப்படுகொலை

(4) உள்நாட்டுப் போர்

119. தென்னாப்பிரிக்கா காமன்வெல்த் அமைப்பில் சேருவதற்கு நேரு எதிர்ப்பு தெரிவித்ததற்குக் காரணம்..............

(1) இந்தியாவுடன் அது பகைமை காட்டியது

(2) அங்கு நடந்த இனவெறி அரசு

(3) அது வறுமை நிறைந்த நாடு

(4) அங்கு போர் நடந்துகொண்டிருந்தது

120. இனவேறுபாட்டைப் பின்பற்றும் எந்தநாடும் ......... எதிராகச் செயல்படுகிறது.

(1) காமன்வெல்த் அமைப்புக்கு

(2) உலக அமைதிக்கு

(3) அரசியல் சுதந்திரத்திற்கு

(4) ஐக்கிய நாடுகள் கொள்கைக்கு

தமிழை மொழிப்பாடம்—**II** ஆகத் தேர்வு செய்த மாணாக்கர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பகுதி IV : தாள் II
# தமிழ்

*குறிப்பு*: கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **121** முதல் **126** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

இந்திய வரலாற்றில் பல சிற்றரசுகளை ஒருங்கிணைத்த மகதப் பேரரசு முதன்மையாக விளங்கியது. இதனை இராஜகிருகம் என்னும் தலைநகரில் இருந்து மன்னர் பிம்பிசாரன் ஆண்டான். பின்னர் இவருடைய மகன் அஜாத சத்துரு அரசை விரிவுபடுத்தவும், சிற்றரசுகளை ஒடுக்கவும் தலைநகரை கங்கைக்கரைக்கு மாற்றி பாடலிபுத்திரம் என்னும் நகரை நிறுவியதாகவும் சொல்லப்படுகிறது. 1892-இல் தளபதி வாடல் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சி மூலம் பாடலிபுத்திர நகரம் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது என்றும், அது கங்கையுடன் சோனை நதி கலக்கும் இடத்திற்கு வடக்காக அமைந்திருந்தது என்றும் அறியப்பட்டது. இக்கருத்தை "வெண்கோட்டு யானை சோனை படியும் பொன்மலி பாடலி" என்னும் குறுந்தொகைப் பாடல் வரிகளும் உறுதிப்படுத்துகின்றன. பாடலி நகரம் இருந்த காலத்திலேயே தமிழ் இலக்கியம் இதனை பதிவுசெய்துள்ளது என்பதை நாம் அறியலாம்.

**121.** குறுந்தொகைப் பாடலில் பதிவாகியுள்ள நதி

(1) சோனை

(2) பொன்மலி

(3) கங்கை

(4) பாடலி

**122.** பாடலிபுத்திரம் ........... மிகுந்த நகரம் என பாடல் குறிப்பிடுகிறது.

(1) யானைகள்

(2) வீரர்கள்

(3) நீர்வளம்

(4) பொன் வளம்

**123.** மகதப் பேரரசின் தொடக்ககாலத் தலைநகரம்

(1) இராஜகிருகம்

(2) நாலந்தா

(3) பாடலிபுத்திரம்

(4) புவனேஸ்வரம்

**124.** இந்திய வரலாற்றில் மகதப் பேரரசு முதன்மையாக விளங்கியது எவ்வகையில்?

(1) பல வெற்றிகளைப் பெற்ற வகையில்

(2) நாடுகளைக் கைப்பற்றிய வகையில்

(3) பல போர்களைச் செய்தவகையில்

(4) பல சிற்றரசுகளை ஒருங்கிணைத்த வகையில்

**125.** அஜாத சத்துரு தலைநகரை கங்கைக்கரைக்கு மாற்றியது

(1) தலைநகரை வளமையாக்க

(2) நீர்பாசனத்தை விரிவுபடுத்த

(3) அரசை விரிவுபடுத்த, சிற்றரசுகளை ஒடுக்க

(4) அரசைப் பாதுகாக்க, சிற்றரசுகளைக் காப்பாற்ற

**126.** இப்பகுதியில் இருந்து குறுந்தொகை பற்றி அறியவருவது

(1) கி.மு. 5-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு உருவானது

(2) கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் உருவானது

(3) கி.மு. 5-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு உருவானது

(4) கி.மு. 5-ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு உருவானது

குறிப்பு: மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க (கேள்வி எண் **127** முதல் **141** வரை):

**127.** இந்த வாசித்தல் தேர்வில் எவ்வாறு மதிப்பெண் வழங்குவீர்கள்?
கேள்வி: புலி அழிந்து போன இனமா?
பதில்-1 : இல்லை ஆனால் அதனைக் காண்பது அரிதாகிவிட்டது
பதில்-2 : புலியினம் அழிவின் விளிம்பில் உள்ளது

(1) பதில் 2-க்கு ½ மதிப்பெண், பதில் 1-க்கு 1 மதிப்பெண்

(2) பதில் 1-க்கு 1 மதிப்பெண், பதில் 2-க்கு 1 மதிப்பெண்

(3) பதில் 2-க்கு 1 மதிப்பெண், பதில் 1-க்கு 0 மதிப்பெண்

(4) பதில் 1-க்கு ½ மதிப்பெண், பதில் 2-க்கு 1 மதிப்பெண்

**128.** ஒரு பாடப்பகுதி தேவையானதா என்பதைப் பொதுவாக அறிய மாணவர்களுக்கு உதவும் உத்திமுறை

(1) பிரிடிக்டிங்

(2) சம்மரைசிங்

(3) ஸ்கானிங்

(4) ஸ்கிம்மிங்

129. மாணவர்கள் நான்கு பாத்திரங்களைக் கொண்ட வசனநாடகம் ஒன்றை 10 வரிகளில் எழுதுகிறார்கள். ஒவ்வொரு பாத்திரமும் ஒரு வகை வாக்கியத்தை மட்டும் பயன்படுத்த வேண்டும். இந்த வகைப் பயிற்சி இதற்கு பயன்படுகிறது

(1) படித்தலுக்குப் பின்பான பயிற்சி

(2) எழுதுதலுக்கு முன்னான பயிற்சி

(3) இலக்கணப் பயன்பாடு

(4) சொல் பயன்பாடு

130. மூன்றாம் வகுப்பு மாணவர்களிடம் படைப்பெழுத்துத் திறனை வளர்க்க உகந்த முறை எது?

(1) சில படங்களை வைத்துக் கலந்துரையாடுதல்

(2) மாணவர்கள் எதை விரும்பினாலும் எழுத அனுமதித்தல்

(3) கொடுக்கப்பட்ட தலைப்பைப் பற்றி விரிவாகக் கலந்துரையாடுதல்

(4) எழுதும் பலகையில் கதைக்குறிப்புகளை எழுதுதல்

131. உங்கள் வகுப்பில் உள்ள மாணவர்கள் ஆங்கிலம் பேச கூச்சப்படுகிறவர்களாக இருந்தால் அவர்களின் தயக்கத்தைப் போக்க நீங்கள் என்ன செய்வீர்கள்?

(1) எளிமையான தலைப்பைக் கொடுத்து தன்விருப்பமாக வகுப்பில் பேசவைத்தல்

(2) மற்றவர்கள் பேசிமுடித்த பின் கடைசியாக அவர்களைப் பேச வைத்தல்

(3) கற்கும் மொழியில் தனிப்பயிற்சி அளிக்கலாம்

(4) மாணவர்கள் இருவர் இணைந்தோ அல்லது சிறு குழுவாகவோ தம்முடைய பேச்சைத் தாமே எழுதிப் படித்து ஒத்திகைப்பார்க்க அனுமதித்தல்

132. கவனித்தறிதல் பயிற்சிக்காக மாணவர்கள் ரயில்வே அறிவிப்பு ஒன்றைக் கேட்டு, ரயில்கள் வந்து சேரும் நேரம், புறப்படும் நேரம், இரண்டையும் ஒரு அட்டவணையில் குறித்துக் காட்டுகிறார்கள் இதன் மூலம் மாணவர்கள்

(1) பதிவு செய்யப்பட்ட பேச்சைக்கேட்டு ஒரு அட்டவணையை நிரப்புகிறார்கள்

(2) அறிவிப்பு ஒன்றை மாணவர்கள் உரக்கப் படிக்கிறார்கள்

(3) தகவல் நிரப்பப்பட்ட அட்டவணை ஒன்றைப் புரிந்துகொள்கிறார்கள்

(4) ஒரு குறும்படத்தைப் பார்க்கிறார்கள்

133. பருவமடைந்த வயதில் ஒரு புதிய மொழியைக் கற்கும் போது ....................

(1) மொழித்திறன் இயல்பாக உள்ளது

(2) மொழி கற்றல் கடினமடைகிறது

(3) மொழித்திறன் கெடுகிறது

(4) மொழித்திறன் கூடுகிறது

134. இ-லா்னிங் என்பது

(1) தொலைநிலைக் கல்விமுறை

(2) ஆவணப்படம் உருவாக்கும் முறை

(3) தொழிநுட்பத்தைப் பயன்படுத்தும் கலப்பான கற்றல் முறை

(4) வன்பொருள்களை அதிகமாக பயன்படுத்தும் முறை

135. கற்கும் மொழியின் கல்விவடிவம், பேச்சு வடிவம் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை இருமொழி பேசும் மாணவர்கள் பிரித்தறிந்து பயில செய்ய வேண்டியது

(1) கற்கும் மொழியில் உள்ள நூல்களை அதிகம் படிக்க வைத்தல்

(2) ஆங்கிலத்தில் அதிகம் எழுத வைத்தல்

(3) இருமொழிப் படங்களைப் பார்க்கவைத்தல்

(4) கற்கும் மொழியில் பேசுதல்

136. மற்றவர்களை விட மொழிகற்றல் திறன் குறைவாக உள்ள மாணவர்களுக்கு உதவ உருவாக்கப்படும் கற்பித்தல் திட்டம்

(1) சம்மரைசேஷன்

(2) ரி-ஃபார்முலேஷன்

(3) ரிமெடியேஷன்

(4) ரிவிஷன்

137. பலவகை மொழித்திறன் கொண்ட மாணவர்கள் உள்ள வகுப்புக்குத் தேவைப்படும் பாடமுறை

(1) சில பாடவேளைகளில் ஒரேதன்மை கொண்ட குழுவாக மாணவர்களை இருக்கச் செய்ய வேண்டும்

(2) பல்வேறு கற்றல் திறமை கொண்ட மாணவர்களிடையிலான பரிமாற்றத்திற்கு வழி அமைப்பதாக இருக்க வேண்டும்

(3) கணிதம், மொழிகள் இரண்டிற்கும் அதிக அழுத்தம் தருவதாக இருக்க வேண்டும்

(4) விளையாட்டு, மொழிகள் இரண்டிற்கும் கவனம் தருவதாக இருக்க வேண்டும்

**138.** மாணவர்களுக்குத் தெரிவு செய்யப்படும் ஆங்கில மொழிப்பாட நூல் இதனைத் தருவதாக இருக்கக் கூடாது:

(1) கற்பித்தலுக்கான வழிமுறையின் வைப்புமுறை பற்றிய சிறுகுறிப்புகள்

(2) தகவல்களைச் சமச்சீராக அமைத்தல்

(3) கற்றல் அனுபவத்திற்குரிய ஒருங்கிணைந்த அலகுகள்

(4) ஆசிரியர்களுக்கான விரிவான பாடத் திட்டம்

**139.** மொழி கற்றலில் சிலவகை இலக்கணப்பிழைகள் நேர்வது இயல்பானது. அதனால் ஆசிரியர்கள்

(1) வகுப்பறையில் பிழை நடக்கும் போதெல்லாம் உடனே அதை திருத்திச் சொல்லி மற்றவர்கள் அப்பிழையைச் செய்யாமல் இருக்க வழி செய்யலாம்

(2) மாணவர்கள் தம் பேச்சையோ வாசிப்பையோ முடிக்கும் வரை காத்திருந்து அதில் காணப்படும் பொதுவான பிழைகளுக்கான திருத்தங்களைக் குறிப்பிடலாம்

(3) அவை இயல்பானவை என விட்டுவிடலாம்

(4) பிழை செய்யும் மாணவர்களை அடையாளம் கண்டு தனி வகுப்புகள் நடத்தலாம்

**140.** தாய்மொழி அல்லாத மற்ற நாட்டின் மொழியைக் கற்பிக்கும் ஒரு ஆசிரியர் தயக்கம் நிறைந்த, ஊக்கம் குறைந்த, மாணவர்களைக் கொண்ட வகுப்பறையை சந்திக்க நேர்கிறது. இதனைத் தவிர்க்க

(1) கல்வி ஆலோசகர் ஒருவரை வகுப்பில் பேசவைக்கலாம்

(2) ஊக்கமற்ற மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு தனிவகுப்புகள் நடத்தலாம்

(3) மாணவர்கள் அவர்களுக்கு முடிந்தபோது பயிற்சிகளைச் செய்ய அனுமதிக்கலாம்

(4) மாணவர்களை ஊக்குவிக்கவும், அவர்கள் கற்றலை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ளவும் உகந்த உத்திகளையும் வழிமுறைகளையும் பயன்படுத்தலாம்

**141.** மொழி கற்போர், செய்முறை வழியாகவே கற்கிறார்கள். இந்தக் கருத்துக்கு பொருந்திவரும் செயல் எது?

(1) பாடத்தின் பொருளை முழுமையாகத் தாய்மொழியில் புரிந்து கொள்ள ஊக்கமளிப்பது

(2) பருண்மையான பாடப்பொருளில் தொடங்கி கருத்துவடிவான நிலைநோக்கிச் செல்வது

(3) மாணவர்கள் பார்த்து அதே போலச் செய்வதற்கேற்ற மாதிரிப் பேச்சையும் எழுத்தையும் ஆசிரியர்கள் உருவாக்குதல்

(4) தொடர்ந்து பயிற்சி செய்வதற்கான வாய்ப்புகள் மிகவும் முக்கியமானது. அதுவே பழக்கங்களை உருவாக்கப் பயன்படுகிறது

*குறிப்பு*: கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **142** முதல் **150** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

இரைச்சல் என்பதற்கு அவசியமில்லாத, விரும்பத்தகாத, தொந்தரவு செய்கிற ஓசைகளின் தொகுப்பு என்று அகராதிகள் பொருள் கூறுகின்றன. சாதாரணமாக 50 டெஸிபல் வரை செறிவுள்ள ஒலி தீங்கு செய்யாதது என்று வகைப்படுத்தப்படுகிறது. நம்முடைய காதுகள் ஒலியால் ஏற்படும் அதிர்வுகளை மூளைக்கு அனுப்பி அடையாளம் காண உதவுகின்றன. இனிமையான, இதமான ஒலி இசை எனவும் எரிச்சலூட்டுகிற ஒலி ஓசை எனவும் வகைப்படுத்தப்படுகின்றன. முன்பு நகரங்களிலும் கிராமங்களிலும் இடமும் மரங்களும் நிறைந்திருந்ததால் இரைச்சல் குறைந்திருந்தது. ஆனால் தற்பொழுது இடமும் இல்லை போதுமான மரங்களும் இல்லை. இதன் விளைவாகவே இன்று இரைச்சல் அதிகரித்துள்ளது. இத்தகைய இரைச்சல் மிக்க சூழலில் தூங்கும் ஒரு மனிதருக்கு முழுமையான ஓய்வு கிடைப்பதில்லை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதிர்வோடு கூடிய இரைச்சலை ஏற்கும் மனித இதயம் படபடப்பை வெளிப்படுத்துகிறது. இரத்த அழுத்தமும் உடல் வெப்பநிலையும் வேகமாக உயருகிறது. இரும்பு ஆலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்குத் தோல் நிறம் மங்கியும் இதயத்துடிப்பு சீரற்றும் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இரைச்சலினால் தொழிலாளர்களின் நுணுக்கமான இயக்கங்கள் பாதிக்கப்பட்டு அவர்களின் திறன்கள் குறைகின்றன. மரங்களை நிறைய வளர்த்து இரைச்சலைக் குறைத்து அமைதியான சூழலோடு வாழ்வது நாகரிக சமூகத்தின் தேவையாகும்.

**142.** இரைச்சல் என்பது

(1) அவசியமான, விரும்பத்தகாத, தொந்தரவு செய்கிற ஓசைகளின் தொகுப்பு

(2) அவசியமில்லாத, விரும்பத்தக்க, தொந்தரவு செய்கிற ஓசைகளின் தொகுப்பு

(3) அவசியமில்லாத, விரும்பத்தகாத, தொந்தரவு செய்யாத ஓசைகளின் தொகுப்பு

(4) அவசியமில்லாத, விரும்பத்தகாத, தொந்தரவு செய்கிற ஓசைகளின் தொகுப்பு

**143.** தீங்கு செய்யாத ஒலியின் செறிவு

(1) 50 டெசிபல் மட்டும்

(2) 50 டெசிபல் வரை

(3) 50 டெசிபலுக்கு மேல்

(4) 50 டெசிபல் தொடங்கி

**144.** காதுகள் அனுப்பும் ஒலி, மூளையில் நிகழும் செயல் சுருக்கமாக

(1) அதிர்வுகள் - அடையாளம்

(2) அடையாளம் - அலைநீளம்

(3) அடையாளம் - ஒலியலை

(4) அதிர்வுகள் - ஒலியலை

**145.** இரைச்சல் குறைந்திருந்ததற்குக் காரணமானவை

(1) செறிந்த காற்று, குறைந்த மரம்

(2) அதிக இடம், செறிவான மரம்

(3) அதிக இடம், நிறைந்த காற்று

(4) அதிக மரம், குறைந்த இடம்

**146.** இரைச்சல் மிக்கச் சூழலில் தூங்கும் ஒரு மனிதருக்கு ..................

(1) முழுமையான ஓய்வு கிடைப்பதில்லை

(2) முழுமையான அமைதி கிடைப்பதில்லை

(3) முழுமையான தூக்கம் கிடைப்பதில்லை

(4) முழுமையான ஓய்வு கிடைக்கிறது

**147.** இரைச்சலால் வேகமாக உயர்பவை

(1) இதயத்துடிப்பு, உடல் அதிர்வு

(2) உடல் வெப்பநிலை, அதிக அழுத்தம்

(3) இரத்த அழுத்தம், உடல் வெப்பநிலை

(4) இரத்த அழுத்தம், வெப்பநிலை

148. இரும்பு ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உருவாகும் பாதிப்புகள்

(1) தோலின் நிறம் கூடுதல், இதயத் துடிப்பு குறைதல்

(2) இதயம் பழுதடைதல், தோல் நோய் உருவாதல்

(3) தோல் நிறம் மாறுதல், இதயத்துடிப்பு சீராக இருத்தல்

(4) தோல் நிறம் மங்குதல், இதயத்துடிப்பு சீர்குலைதல்

149. இரைச்சலினால் தொழிலாளர்களிடம் உருவாகும் தீமைகள்

(1) திறன் குறைதல், வேலை தடைபடுதல்

(2) அதிக அழுத்தம், மனத்தடுமாற்றம்

(3) மனத்தடுமாற்றம், வேலையில் கவனமின்மை

(4) நுணுக்கமான இயக்கங்கள் பாதிக்கப்படுதல், திறன்கள் குறைதல்

150. இதயம் படபடப்பை வெளிப்படுத்துவதற்கு இது காரணமாக அமைகிறது

(1) அதிர்வோடு கூடிய இரைச்சல்

(2) அதிர்வோடு கூடிய இசை

(3) இரைச்சலுடன் கூடிய அலைச்சல்

(4) அமைதியுடன் கூடிய அதிர்வு

SPACE FOR ROUGH WORK

*கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :*

1. பக்கம் 2-ல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம்/கறுப்புமை பந்துருள்முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.

2. தேர்வு எழுதுபவர் அவர் தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத்தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.

3. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.

4. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.

5. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்ஃபோன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.

6. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

7. தேர்வுக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிருந்து வெளியேறக் கூடாது.

8. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.

9. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.

10. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

11. எச் சூழலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடா.

12. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

**READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY :**

1. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with Blue/Black Ballpoint Pen on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
2. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
3. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
4. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet/Answer Sheet in the Attendance Sheet.
5. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the Examination Hall/Room.
6. Each candidate must show on demand his/her Admit Card to the Invigilator.
7. No candidate, without special permission of the Superintendent or Invigilator, should leave his/her seat.
8. The candidates should not leave the Examination Hall without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet, a second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case.
9. Use of Electronic/Manual Calculator is prohibited.
10. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
11. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
12. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Room/Hall. *The candidates are allowed to take away this Test Booklet with them.***

**निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :**

1. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर-पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह नीले/काले बॉलपॉइंट पेन से भरें। एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है।
2. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर-पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ। परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें।
3. परीक्षा पुस्तिका एवं उत्तर-पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर-पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी।
4. परीक्षा पुस्तिका/उत्तर-पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाजिरी-पत्र में लिखें।
5. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-कार्ड के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है।
6. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-कार्ड दिखाएँ।
7. अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें।
8. कार्यरत निरीक्षक को अपना उत्तर-पत्र दिए बिना एवं हाजिरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल नहीं छोड़ेंगे। यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाजिरी-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर-पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा।
9. इलेक्ट्रॉनिक/हस्तचालित परिकलक का उपयोग वर्जित है।
10. परीक्षा हॉल में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं। अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा।
11. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर-पत्र का कोई भाग अलग न करें।
12. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी कक्ष/हॉल छोड़ने से पूर्व उत्तर-पत्र निरीक्षक को अवश्य सौंप दें। *परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं।***